**6** **நீலாம் வாசிப்புத் திட்டத்தில் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர் அப்துல் கரீமைப் பள்ளி நூலக சிறப்பிதழுக்காக நீ செய்த நேர்காணலை எழுதுக.**

நிருபர் : வணக்கம் கரீம். நலமா? நான் விவேகன். தேசிய வகை துன் சம்பந்தன் தமிழ்ப்பள்ளி மாணவன். எங்கள் பள்ளியில் நூலக விழா செய்யத் திட்டமிட்டுள்ளோம். அதற்காக ஒரு சிறப்பு இதழையும் வெளியிடவுள்ளோம். அவ்விதழுக்காக உங்களை [ ] செய்ய வந்துள்ளேன்.

கரீம் : வணக்கம் விவேகன். நான் நலம். நீங்கள் நலமா? அப்படியா? மிக்க மகிழ்ச்சி.

நிருபர் : நான் மிக்க நலம். நன்றி கரீம். நீலாம் வாசிப்புத் திட்டத்தைப் பற்றி விளக்கம் கூற முடியுமா?

கரீம் : [ ] என்பது பள்ளி நூலகம் வழிநடத்தும் ஒரு போட்டியாகும். பள்ளியில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும்.

நிருபர் : நீலாம் வாசிப்புப் போட்டியில் மாணவர்கள் என்ன செய்வார்கள்?

கரீம் : நீலாம் வாசிப்புப் போட்டியில் மாணவர்கள் அதிகமான [ ] வாசித்து அதிலுள்ள முக்கிய தகவல்களை எழுத வேண்டும். அதைக் கொண்டு நூலகப் பொறுப்பாசிரியர்கள் மாணவர்கள் வாசித்த நூல்களின் எண்ணிக்கைகளை நீலாம் வாசிப்புத் திட்டத்தில் பதிவு செய்வார்கள். அவற்றைப் பரிசீலனைச் செய்தே அதிக நூல்கள் வாசித்த மாணவர்களுக்குப் [ ] வழங்கப்பட்டு வருகின்றன.

நிருபர் : அருமையான விளக்கம். நீங்கள் மாநில அளவில் வெற்றி பெற்றுள்ளீர்கள். எத்தனை நூல்கள் வாசித்து விட்டீர்கள்?

கரீம் : நான் இதுவரையிலும் 734 நூல்கள் வாசித்து மாநில அளவில் [ ] இருக்கிறேன்.

LIVEWORKSHEETS

நிருபர் : நல்லதொரு சாதனை. எந்த மாதிரியான நூல்களை அதிகம் விரும்பி வாசிப்பீர்கள்?

கரீம் : எனக்குக் கதை புத்தகங்கள் என்றால் மிகவும் பிடிக்கும். சிறுவயதிலிருந்தே என் அப்பா நிறைய நூல்களை வாங்கிக் கொடுப்பார். அப்பொழுது தொடங்கிய பழக்கம்தான்.

நிருபர் : உங்கள் அப்பாவும் ஒரு சிறந்த வாசகரா?

கரீம் : ஆமாம். எங்கள் வீட்டில் ஒரு நூலகமே உள்ளது. தினந்தோறும் நாங்கள் ______ சேர்ந்து நிறைய நூல்களை வாசித்து மகிழ்வோம்.

நிருபர் : அற்புதமான பழக்கம் கரீம். இப்பழக்கத்தை வீட்டில் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். இத்துறையில் வேறு ஏதும் ______ விரும்புகிறீர்களா?

கரீம் : ஆமாம். ஒரு விமர்சன நூல் எழுதலாம் என்கிற ______ உண்டு. மாணவர்கள் அதைப் படிக்கும்போது வாசிப்பதற்கான தூண்டுதல் ஏற்பட வாய்ப்புண்டு.

நிருபர் : அருமையான திட்டம் நண்பரே. உங்கள் திட்டம் நிறைவேற என் வாழ்த்துகள். வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்திக் கொள்ள மாணவர்கள் என்ன செய்ய வேண்டும்?

கரீம் : ______ ஒரு கதை வாசிக்கத் துவங்கலாம். பிடித்த விசயத்திலிருந்து வாசிப்பைத் துவங்குவது சிறந்த முறையாகும். கதைகள் என்றாலே பிடிக்காதவர்கள் இருக்க மாட்டார்கள் அல்லவா?

நிருபர் : உங்கள் ஆலோசனை அனைவருக்கும் ______ அளிக்கும் என நம்புகிறேன். அருமையான நேர்காணலை வழங்கியமைக்கு மிக்க நன்றி கரீம். எங்களின் நூலக விழாவிற்கு உங்களைப் பள்ளியின் சார்பில் வரவேற்கிறோம். அன்றைய தினமே இந்த நேர்காணல் அடங்கிய சிறப்பிதழ் வெளியாகும்.

கரீம் : அழைப்பிற்கு மிக்க நன்றி விவேகன். நிச்சயம் கலந்து கொள்வேன். மீண்டும் சந்திப்போம்.

LIVEWORKSHEETS

விடைகள் :

| | | | |
|---|---|---|---|
| பரிசுகள் | நீலாம் | திட்டம் | பயன் |
| சாதிக்க | நூல்களை | நேர்காணல் | தினமும் |
| | முதல் நிலையில் | குடும்பமாகச் | |

LIVEWORKSHEETS